gistered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A 59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹூ ஆடிமீ உஉஉ ( 1946 ஆகஸ்ட் 6 செவ்வாய்க்கிழமை ) [இல கஉ


# தமிழ் மக்களின் தற்கால நிலை

## தலைவர் என்போரின் பராமுகம்

### சகல விஷயங்களிலும் தமிழரின் பிற்போக்கு அதனை நிவிர்த்திக்க வழியில்லையா?

### சிங்களர் அடைந்துள்ள முன்னேற்றம்

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

**தலைவர்கள் தோற்றம்**

கோடைக்காலத்தில் மயிர்க்கொட்டிப் புழுக்கள்போலவும், மாரிக்காலத்திற் புற்றீசல் போலவும், பொதுவாக இலங்கையிலும், விசேஷமாக எங்கள் தமிழ்நாட்டிலும் இப்போது "தலைவர்கள்" கிளம்பி விட்டார்கள். தேர்தற்காலம் நெருங்க நெருங்க இவர்களின் தொகை அதிகரிக்கும் என நம்பலாம். இவர்களின் நோக்கம் என்ன? லட்சியம் என்ன? அடுத்துவரும் பாராளுமன்றத் தேர்தல்களுக்குக் கட்சிபிரிந்து தத்தமக்கு விரும்பிய அபேட்சகர்க்கு வாக்குச் சேர்க்க முயற்சிப்பதே இத் தலைவர்களின் நோக்கமும் லட்சியமும். பாராளுமன்றத் தேர்தல்கள் முடிந்ததும், இத்தலைவர்களின் "தேசாபிமான"க் கடமைகளும் பூர்த்தியாய், அடுத்த தேர்தல் வரும் வரை ஒதுங்கி விடுவர். இந்த அழகில் நம் தமிழ் நாட்டின் அரசியல் நாடகம் நடிக்கப்படுகிறது.

○

**அரசியல் என்றால் என்ன?**

அரசியல் என்றால் என்ன? பாராளுமன்றத் தேர்தல்களுக்கு அபேட்சகராக வருவதோ, அவர்களுக்கு ஆதரவுதேடுவதோ, அரசியலாகமாட்டாது நாட்டில் உள்ள மக்களின் சுபீட்சத்துக்காக அரசாங்கத்தை நடத்தும் வழிவகைகளைச் செய்வதும், செய்ய முயற்சிப்பதுமே அரசியலாகும். பொதுவாக இலங்கை, விசேஷமாகத் தமிழ் நாட்டின் நிலைமை என்ன? வடமாகாணம், கீழ் மாகாணம் என்னும் இரு மாகாணங்களிலும் வாழும் தமிழ்மக்கள் முந்தியிலும் பார்க்க இப்போது அரசியற் றுறைகளில், பொருளாதாரத் துறைகளில், சமயவிஷயங்களில் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்களா? என்னும் இன்னோரன்னவற்றை இச் சந்தர்ப்பத்தில் அலசிப் பார்க்க வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும். அப்படிப் பார்க்குமளவில் நாம் இம்மியளவேனும் முன்னேறவில்லை என்றே கருதுகிறோம்; தமிழ்நாட்டினருடன் ஒத்துப்பார்க்குமளவில், தென்னிலங்கையில் உள்ள சிங்களச் சகோதரர் சகல விஷயங்களிலும் முன்னேறியிருக்கின்றனர் என்றே கூறவேண்டும். தமிழ்மக்கள் ஒன்று உலக்கை தேய்ந்து உளிப்பிடியானவாறு சகல விஷயங்களிலும் மாட்டுவால் வளர்ச்சி பெற்று இருக்கிறார்கள்.

○

**காரணம் என்ன?**

இன்று தமிழ்மக்கள் பெருமைப் படக்கூடிய காரியம எதனையாவது நாம் சாதிக்கவில்லை: பழைய பெருமைகளைப் பறைபடிக்கிறோம் அன்றி நாமாக இப்போது பெருமைகளைச் சம்பாதிக்கவில்லை. "முன்னர் நான் மணியகாரன், இன்று ஒரு பணம் கொடு" என்று ஒரு பிச்சைக்காரன் கேட்டால், பிச்சை கொடுப்பார்யாருமில்லை. நாம் எம் பழைய பெருமையை வைத்துக்கொண்டு பறையடிப்பதிற் பயனில்லை. அரசியல் விஷயமாக எமக்கிடையே பூரண அறிவு உண்டா? அரசாங்கசபைத் தேர்தற் காலங்களில் அபேட்சகரும், அவரை ஆதரிப்போர்களும் கூட்டங்களிலும், துண்டுப் பிரசுரங்களாலும் தரும் அறிவு தான் நாம் சம்பாதிக்கும் அரசியல் ஞானம். அவ்வளவுடன் அது நின்றுவிடுகிறது. இந்த நாட்டின் அரசியலமைப்பு எப்படியிருக்கிறது? அதில் உள்ள திட்ப நுட்பங்கள் யாவை? அரசியலமைப்பில், தமிழ்மக்களாகிய நாம் கொண்டுள்ள பங்கு என்ன? உரிமைகள் என்ன? என்னும் இன்னோரன்னவற்றைப் பொதுஜனங்களுக்கு விளக்கும் தலைவர்களில்லை: பத்திரிகைகள் இல்லை: பொது ஸ்தாபனங்கள் இல்லை இவை இருந்தாலும், அவை ஒருசில சுயநலமிகளின் வசத்திலகப்பட்டு, அவர்களின் அரசியற் கொள்கைகளை, நோக்கங்களைப் பிரதிபலிப்பனவாயிருக்கின்றனவேயன்றிப் பட்சபாதகமற்ற முறையில் விஷயங்களை எடுத்துக் காட்டிப் பொதுஜனங்களை உண்மை வழியிற் செலுத்துவனவாயில்லை.

○

**தலைவர்களின் கடமை**

காலத்துக்குக் காலம் தலைவர்கள் எனத் தம்மைச் சொல்லிக்கொண்டு கிளம்பும் தலைவர்களும், நமது அரசாங்கசபைப் பிரதிநிதிகளும் தமிழ் மக்களை நல்வழியிற் கொண்டுசெல்லும் விஷயத்தில் தவறிவிட்டார்கள் என்றே நம்புகிறேன். இற்றைக்குப் பத்து ஆண்டு காலத்துக்கு முன் அரசாங்கசபைப் பிரதிநிதிகள் ஆகத் தெரிவு செய்யப்பட்ட நம சனத் தலைவர்கள் இற்றைவரை எம்நாட்டுக்குச் செய்துள்ள நன்மைகள் யாவை என்று கேட்கிறேன், இவர்கள் அரசாங்கசபையிற் கால் வைத்ததும் தாம் பொதுஜன ஊழியர் என்பதை அறவே மறந்துவிட்டு, கேவலம் கட்சிப் பூசல்களில் அகப்பட்டுத் தங்கள் மேலான லட்சியமாக இருக்கவேண்டிய பொதுஜன

தொடர்ச்சி 4ம் பக்கம்

# ஒத்துழைப்பு

## பொலிஸ் தலைவரின் வேண்டுகோள்

இலங்கைப் பொலிஸ் பகுதித் தலைவரான "கேணல்" பேக்கன், தம் பரிபாலன அறிக்கையில், பொலிஸ் நிர்வாகம் சம்பந்தமாகப் பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

குற்றஞ்செய்த ஆளைத் தண்டிப்பதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் காலம் கடந்துவிட்டது. குற்றஞ் செய்தவன் பொலிசாரைக்கண்டு ஓடிச்செல்லும் காலம் நடந்துவிட்டது. இப்பொழுது பொலிசாரிடமிருந்து தப்புவதற்கு விரைவாக மறைந்து செல்லக்கூடிய சாதனங்கள் இருக்கின்றன. குற்றஞ் செய்துதப் ச் செய்பவர்களிலும் விரைவாக பொலிசார் செல்லக்கூடியதாகச் சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.

பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு வேண்டும். பொதுமக்களுடைய நம்பிக்கையை பொலிசார்பெறவேண்டும். இதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. பொதுமக்களும் பழைய சம்பவங்களை மறந்து இந்த ஒத்துழைப்பை நிலைநாட்டப் பாடுபடவேண்டும். பொலிசாரும்தங்களைப் போலப்பொதுஜனங்கள்தான் என்பதைப்பொதுமக்கள்உணர வேண்டும் ஆனால் பொலிசாருக்கு தேசத்தில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கான வேலைகளைச் செய்வதற்கு விசேஷ தத்துவம் இருக்கிறதென்பதையும் அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

வருங்காலத்தில் பொலிஸ் படையைச் சிறந்ததாக அமைக்க முடியும். இப்பொழுது பொலிஸ்படைக்கு எடுக்கப்படுபவர்களது தராதரம் சிறந்ததாக இருக்கிறது. கூடிய சம்பளமும் திருத்திய சேவை நிபந்தனைகளும் பொலிஸ் படைக்கு வழங்கப்படுமெனும் உறுதி காரணமாக அநேக தராதரமுடையவர்கள் இப் படைக்கு வருகின்றனர். பழைய இராணுவத்தினரும், யுத்தகாலத்தில் வேலைசெய்த பொதுமக்களும், கல்லூரிப் படிப்பு முடிந்து உத்தியோகம் நாடுபவர்களும் பொலிஸ் படைக்கு வருகின்றனர். தற்காலிகமாக ஸ்தாபிக்கப்பட்ட பொலிஸ் படைகள் பழையவர்களைப்போலக் கருதப்படுவதுடன் சமாதானகாலத்திற்கானதிட்டமான ஒழுங்குகள் பொலிஸ் படையில் செய்யப்படும்.

# துணிப் பஞ்சம்

## அத்துடன் விலை உயர்வு

இந்த ஆண்டில் முதல் ஆறுமாதங்களுக்குமாக இந்தியா 1 கோடியே 75 லட்சம் யார் துணிகளைத் தந்தது. இந்தத் தொகை இலங்கை மக்களின் உபயோகத்துக்குப் போதியதன்று. என்றாலும் ஓரளவுக்கு ஜனங்கள் திருப்தியுடன் இருந்தனர். இப்போது இந்தியா, இத் தொகையை அடுத்த ஆறுமாதத்துக்குத் தரமுடியாது என்று கூறுகிறது ஆகக்கூடி 95 லட்சம் யார் துணியே தரலாம் என்று இந்தியா இப்போது கூறுகிறது.

இந்த நெருக்கடியான நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்று துணிக்கட்டுப்பாட்டதிகாரிகள் சிந்தித்து வருகின்றனர், துணிகள் விநியோகத்தைக் குறைப்பது தான் மார்க்கம் என அவர்கள் முடிவுகட்டி இனிப் புதுக்கூப்பன்கள் வழங்குவதில்லை என்று தீர்மானித்திருக்கின்றனர்.

துணிக் குறைவுடன் துணிகள் விலையும் அதிகரித்து விட்டது இந்திய உற்பத்தியாளரும், அமெரிக்கத் துணி உற்பத்தியாளரும், துணிகளின் விலையை அங்கங்கேயே அதிகரித்து விட்டதால், இங்கேயும் அவற்றின் விலை அதிகரிக்கப்படும் என்று இப்போது தெரிகிறது.

# எப்படி வெளிவந்தன?

## ஆசிரியர் பரீட்சைக்கான கணித வினாக்கள் பரீட்சைக்கு முன்னரே அம்பலமாயின

### பொலிசார் புலன் விசாரிக்கின்றனர்

சென்ற வெள்ளிக்கிழமை (2-8-46) பிற்பகல் 2 மணி தொடக்கமாக, ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சைக்கான கணிதக் கேள்விகள் கொடுக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அக்கணித வினாப் பத்திரங்கள், பரீட்சைக்கு முந்தியே எப்படியோ வெளிவந்து விட்டன. இதன் படனாக, 2 மணிக்கு நடக்க வேண்டிய கணிதப் பரீட்சை பின் போடப்பட்டது.

ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சைக்கான வினாப்பத்திரங்கள், பரீட்சை ஆரம்பமாவதற்கு முன்னரே பரகசியமாகி, அவற்றின் பிரதிகள் தெருக்களில் விற்பனையாயின என்ற ஓர் முறைப்பாடும் கிளம்பியிருக்கின்றது.

இலங்கைக் கல்விப்பகுதியினரால் நடாத்தப்படும் பரீட்சைக் கேள்விப் பத்திரங்கள், குறித்த காலத்துக்கு முன் வெளிவந்தமை இது முதல்தடவையல்ல, இப்படிப் பல முறைகளில், வினாப் பத்திரங்கள் வெளிவந்துள்ளன.

இந்த வினாப்பத்திரங்கள் எப்படிப் பரகசியமாகின்றன என்பது வித்தியா பகுதியார்க்கே பெரும் மர்மமாயிருக்கின்றதாம். இந்த முறையில் நிகழ்ந்த பரீட்சை வினாப்பத்திரங்கள் பரகசியமானதை அறிய பொலிசார் முயற்சி செய்கின்றனர் என்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியய
ஆடிமீ ௨௨ செவ்வாய்க்கிழமை

## துணிப் பஞ்சம் அதிகப்படுமா?

உணவுப்பொருட் கட்டுப்பாடு இன்னும் இரண்டு மூன்று வருடங்கட்கு நீடித்து நிற்றல்கூடுமென்று அதிகாரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள்; உணவுப் பொருள்களுள்ளும் இந்நாட்டு மக்களின் பிரதான உணவுப் பொருள்களாகிய அரிசி, நெல் விஷயத்திலேயே இக்கட்டுப்பாடு நீடித்து நிற்குமாம்; ஏனைய உணவுப் பொருள்களின் கட்டுப்பாடு காலகதியில் நெகிழ்ந்துவிடும்; இல்லையேல் அறவே அகன்றுவிடுமென்பது இங்குள்ள மக்களுட் பெரும்பாலார் கொண்டிருக்கும் நம்பிக்கையாகும்

ஆனால் மனுஷ வாழ்க்கைக்கு உணவைப்போல இன்றியமையாதாகிய உடைப்பொருள் விஷயத்தில் யுத்தம் முடிந்து பல மாசங்களான பின்னராயினும் ஏதும் சகாயம் உண்டாகுமோ என்றால்,யுத்தகாலத்தில் இருந்த நிலைமையைக் காட்டிலும் இனிமேற்றான் உணவுப் பொருள்கள் விஷயமாக இந்நாட்டிலே பஞ்சம் நேருமென யூகிக்கக் கிடக்கின்றது; இப்பொழுதே இங்குள்ள மக்கள் புடைவைதுணிப் பஞ்சத்தினாற் படும் கஷ்டம் சற்றல்லவெனலாம்; ஆயினும் இந்தப் புடைவைப்பஞ்சம் இன்னும் அதிகப்படுமானால் உடுக்கப் பழகிக்கொண்டவர்களாகிய மக்கள் தம் மானத்தைக் காப்பதற்காகிய உடையின்பொருட்டுச் செய்யத்தக்க தென்னவென்பது சிந்திக்கவேண்டியது.

கொழும்பிற் பிரசுரமாகும் ஒரு ஆங்கில தினசரிப்பத்திரிகையின் நிருபர் அங்குள்ள உடைப் பொருட் பகுதிக் கட்டுப்பாட்டதிகாரியாகிய மிஸ்ரர் எட்மன்ட் ரெட்றிக்கோ என்பவரைக் கண்டு புடைவை துணி விஷயமாக வினவியபோது, குறித்த அதிகாரி இலங்கை மக்களுக்கு இப்பொழுது உதவப்படும் புடைவை விகிதத்தைக் காட்டிலும் இன்னும் குறைந்த விகிதமாகவே சில காலத்திற்குப் புடைவை உதவவேண்டி நேரும் என்னுங் கருத்துப்படத் தெரிவித்தாராம்; அவர் எடுத்துக்காட்டுங் காரணங்கள் பின் வருவன: இந்திய அதிகாரிகள் முதல் ஆறு மாசத்திற்கு உதவிய புடைவை விகிதத்திலும் பார்க்க, எஞ்சிய ஆறு மாசங்களுக்குமுள்ள விகிதத்தைக் குறைத்துவிட்டார்கள்; மேலும் இந்திய புடைவைக்கு அந்த நாட்டிலேயே விலை ஏறிவிட்டது; புடைவைக் கட்டுப்பாட்டு உப அதிகாரியாகிய மிஸ்ரர் M. F. de S. ஜயரத்தின என்பவரும் தமது தலைவருடைய அபிப்பிராயத்தோடு ஒட்டிச்சொல்லும்போது இன்னுஞ் சில மேலதிகமாகக் குறித்த பத்திரிகைப் பிரதிநிதிக்குக் கூறியிருக்கின்றாராம் அமெரிக்காவிலே புடைவை விலை அதிகப்படுகின்றதென்றும், புடைவைக்கு மூதற் காரணப் பொருளாகிய பஞ்சு முதலியவற்றிற்கும் அந்தத்தேசத்திலே பஞ்சம் நேரலாயிற்றென்றுந் தெரிவித்துள்ளார். பிருத்தானியர் முன்னரைக் காட்டிலும் இனிமேல் இலங்கைக்கு மேலதிகமான துணியனுப்பலாகுமெனத் தெரிவிக்கின்றனரெனினும், அந்தமேலதிகமான துணி ஏற்றுமதி இலங்கை மக்களின் புடைவைப் பஞ்சத்தைச் சிறிதேனும் குறைத்தற்குச் சத்தியற்றதாகுமென்று மேற்படி புடைவைக் கட்டுப்பாட்டு உப அதிகாரியே தெரிவிக்கின்றார். இவற்றையெல்லாம் உற்று ஆராய்ந்து யோசிக்குமிடத்திற் புடைவைப் பஞ்சம் சில மாசங்களுக்கேனும் அதிகப்படுமென்பது இலகுவில் உத்தேசிக்கத்தக்கதாம்.

இனி, குறித்த பத்திரிகை நிருபர் புடைவை விஷயமாகப் புடைவை வியாபாரிமாரை வினவியபோது, புடைவை வியாபாரத்தில் இக்காலத்திலே மிகச் சொற்ப லாபந்தானுண்டென்றும், சற்றுக் கூடிய இலாபங் கிடைக்குமானால் தாங்கள் இந்தியாவிலிருந்து புடைவை வருவித்தல் ஒருவாறு இயலுமென்றும், அப்படிச் செய்வதற்கு இங்குள்ள புடைவை விலைக் கட்டுப்பாடு இடந்தரமாட்டாதென்றும், இங்கே கட்டுப்பாடிருத்தலினால், ஏனைய நாடுகளிலுள்ளவியாபாரிமார் இந்திய புடைவைக்கு அதிகமான விலையைக் கொடுத்து, அங்குள்ள புடைவைகளைத் தம் நாடுகளுக்குத் தருவிக்கிறார்களென்றும், வியாபாரிமாராகிய தாங்களும் இந்தக் கஷ்ட காலத்திலே உடை விஷயமாக இந்நாட்டிலுள்ள மக்களுக்குத் தங்களால் இயன்ற துணைபுரியச் சித்தமாயிருப்பதாகவுங் கூறினராம்; புடைவை வியாபாரிமார் தெரிவிப்பதன் சாரம் இலங்கையிற் புடைவைக் கட்டுப்பாட்டைடை ஒழித்துவிட்டாற் போதிய புடைவையை இந்தியாவிலிருந்து தருவிக்கலாகுமென்பதும், அப்படிச் செய்வதினாலே, புடைவைப் பஞ்சம் ஒழியுமென்பதுமேயாகும்.

இவை இங்ஙனமாக, இன்னுமொரு விஷயம் அவதானிக்கத் தக்கது; குறித்த பத்திரிகைப் பிரதிநிதி புடைவைக் கட்டுப்பாட்டுப் பகுதித் தலைமையதிகாரியைப் புடைவை இலங்கைக்கு ஏற்றுமதியாதல் குறைந்தால் புடைவைக் கட்டுப்பாட்டு விஷயமாக என்னசெய்ய உத்தேசித்திருக்கிறீர் என்றுகேட்டபோது "அப்படி நேரும்பட்சத்தில் புதிய கூப்பன்களை நான் சனங்களின் உபயோகத்தின்படி வெளியிடமாட்டேன்" என்னுங் கருத்துப் படக் கூறியிருக்கின்றதேன் என்பதுபுலப்படவில்லை; ஏன், புதிய கூப்பன்களைக் கட்டுப்பாட்டதிகாரிவெளியிட்டாலும், கடைகளிலேபுடைவையில்லாவிட்டால்அந்தக்கூப்பன்களால்என்னசெய்ய முடியும்; அல்லதுஇங்குள்ளஏழை மக்களினாற்றான் என்ன செய்ய முடியும்; புடைவைப்பஞ்சம் வந்த காலத்திலே, இந்த நாட்டு மக்களுக்கு மானத்தைக் காப்பதற்காகக் கட்டிக்கொள்ளும் வண்ணம் புடைவையை எவ்வாற்றானும் வருவித்துக் கொடுப்பதே அதிகாரவர்க்கத்தினர்க்குக் கடமையும் பெருமையும் மதிப்புமாகுமேயொழிய. கூப்பனை வெளியில் விடாமலிருப்பது பெருமையாகுமா?

"செயற்கரிய செய்வர் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்க லாதார்,"

என்பது பெரியோர் வாக்கு; எங்கள் சிங்கள மக்களென்றிருப்போர் இந்தியரைப் பகைப்பதனால் வருந்தீமைகளுள் இப் புடைவைப் பஞ்சமு மொன்றாகுமென்பதை யோசிப்பார்களா?

*

## பாராட்டுகிறோம்

காரைநகர்ச் சைவமகாசபை இதுகாறும் ஆற்றி வந்துள்ள சேவைகள் சம்பந்தமான ஓர் அறிக்கை, இப்பத்திரிகையின் சென்ற பிரசுரத்தில் வெளிவந்திருக்கிறது அசைவ அபிமானிகள் ஊன்றி அவதானிக்குமாறு வேண்டிக்கொள்கிறோம், மாயாவாதமும், உலோகாயுதமும் தலை விரித்துத் தாண்டவமாடி நம் மக்களை அல்லற்படுத்தக் கங்கணங்கட்டி நிற்கும் இக்காலத்தில், எம் புராதனமான, சிறந்த ஒழுக்கங்கள், ஆசாரங்கள், அநுட்டானங்கள் என்பவற்றை இப்போது ஊட்டப்படும் நூதனமான கல்விமுறை நாசமாக்க முனைந்துள்ள இக்காலத்தில், மேலான நோக்கங்களுடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ளசிலசைவ ஸ்தாபனங்கள்என்றிருப்பவையே, தம் நோக்கத்தை மறந்து லட்சியத்தைத் தறந்து, எந்த அந்நிய ஆசாரானுட்டானங்களைஇங்குபரவவிடாமல்செய்ய அவை ஸ்தாபிக்கப்பட்டனவோ,அதேகேவல ஆசாரங்களையும்அநுட்டானங்களையும் கொள்கைகளையும் புகுத்த முயற்சிக்கும் இக் காலத்தில், காரைநகர்ச் சைவமகாசபை தனது லட்சியத்தில் இம்மியளவேனும் பிசகாது தொண்டாற்றி வருவது சைவத் தமிழ் மக்களுக்கு மனமகிழ்ச்சி தரக்கூடிய ஓர் விஷயமாகும். இச்சபையினர் சமய வளர்ச்சிக்கான முயற்சிகள் செய்வதுடன், மக்களின் பொருளாதார விருத்தியிலும் ஈடுபட்டு, நெசவுத் தொழிற்சாலைபோன்ற நிலையங்களை ஸ்தாபிக்க முன்வந்துள்ளதும் மெச்சத்தக்க ஓர் விஷயமாகும். சமயத்துக்கும், மக்களின் வாழ்க்கை நிலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதைச் சமயம் லட்சியமாகக் கொள்ளுதல் வேண்டும். இவ் விஷயத்தில் எம் சைவசமயம் மற்றெல்லாச் சமயிசட்கும் ஓர் வழிகாட்டியா யுள்ளது. 'என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்றார் எங்கள் அப்பர் சுவாமிகள். எங்கள் சைவம், மக்கள் பணியையே லட்சியமாகக் கொண்டது. அன்பர் பணி செய்தே எங்கள் நாயன்மாரும் ஏனையோரும் முத்திநிலை கண்டனர். அத்தகைய பணிகளை, சேவைகளை நம் நாட்டிலுள்ள சைவ ஸ்தாபனங்கள் செய்யவேண்டும். நாட்டு மக்களின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்யவேண்டும். இவ்விஷயத்தில் காரைகர்ச் சைவமகாசபை, மற்றும் ஸ்தாபனங்களுக்கு ஓர் முன் மாதிரியாக விளங்குகின்றது என்பதே எமது நம்பிக்கை. இதன் முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம். இது தன் முயற்சிகளை இன்னும் செவ்வனே செய்து எங்கள் மொழிவிருத்திக்கும், சமய அறிவு வளர்ச்சிக்கும், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் தொண்டுபுரிய இறைவன் அருள் முன்னிற்பதாக

# ∴ குறிப்புக்கள் ∴

### பூங்காவினோதமே!

"கட்டக் கரிமணியில்லையாம்; பெயர் முத்துமாலை. இந்த அழகில் நமது யாழ்ப்பாணம் நகரசங்கக் காரியாலயத்துக்குமுன் உள்ள "பூங்காவனம்" இருக்கிறது இந்தப் "பூங்காவன"த்தை ஸ்தாபிக்க டக்ரர் S சுப்பிரமணியம் அவர்கள் ஓர் தொகைப் பணத்தை உதவியுள்ளார். அத்துடன் நகர வரியிறுப்போரின் பணமும் ஓர் தொகை காலந்தோறும் செலவாகி வருகிறது. அதன் கைமேற் பலன் ஒருசில"சவுக்கமரக்"கன்றுகள்தான். இதன் காரணம் என்ன? இந்தக் கேவலமான நிலைக்குப் பொறுப்பாளி யாவர் என்று கேட்கிறோம். இந்தப் பூங்காவனத்தைச் சிறப்பாகச் செவ்வனே நடத்த நகரசங்க அதிகாரிகளால் முடியாவிட்டால், அதனை ஒழித்துவிடுதல் சாலச் சிறந்தது. இப்போது இருக்கும் நிலையில் இப்"பூங்காவனம்" இந்த நகரத்துக்கே ஓர் இழுக்கு என்பதை நகரசங்கத் தலைவர்க்குச் சமர்ப்பிக்க விரும்புகிறோம்.

○

### பரீட்சை ஊழல்

கடந்தவாரம் நிகழ்ந்த ஆசிரியர் தராதரப்பத்திரப் பரீட்சைக்கான வினாப்பத்திரங்கள்பரீட்சைக்கு முன்னரே பரசியமானபடியால்,குறித்த பரீட்சை தவிர்க்கப்படலாயிற்று. இப்படிப் பரீட்சை தவிர்க்கப்பட்டு பின் போடப்பட்டமையினால் பன்னூற்றுக்கணக்கான பரீட்சார்த்திகளடையும் வசதியீனங்களைப்பற்றி அரசாங்கம் சிந்திக்குமா என்று கேட்கிறோம். இப்படிப் பரீட்சை வினாக்கள், பரீட்சைத் தினத்துக்கு முன்னரேயே வெளிவந்தமை இது முதல் தடவையல்ல. இந்தக் கேவலமான முறைக்குப் பொறுப்பாளி யார்? பரீட்சை வினாப்பத்திரங்கள் கேவலம் சந்தைப் பொருள்கள்போல, பகிரங்கமாக வீதிகடோறும் விற்பனையாயினவாம். இது எம் இலங்கை வித்தியாபகுதியாரின் திறமையைக் காட்டா நிற்கின்றது. பரீட்சை வினாப்பத்திரங்கள் பரகசியமானதற்குப் பொறுப்பாளிகளாயுள்ளாரைக் கண்டுபிடித்துத்தக்க தண்டனை கொடுப்பது அரசாங்கத்தின் கடமை என்பதை நாம் கூறத் தேவையில்லை. இவ்விஷயத்தில் அரசினர் தம் வழுவழாக் கொள்கைகளை உதறித்தள்ளி யெறிந்துவிட்டு, உடன் கருமம் ஆற்றுவாராக.

## அகில இலங்கைத் தமிழர் மகாநாடு

அகில இலங்கைத் தமிழர் மகாநாட்டின் அடுத்த ஆண்டுத் தலைவராக ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் வருகிற 17ந் திகதி நிகழவிருக்கும் மகாநாட்டின் உபசரணைச் சபைக்குத் தலைவராக நியாயவாதி ஸ்ரீ எ வி. குலசிங்கமும், காரியதரிசியாக டக்ரர் வி கே. பரமநாயகமும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிஸ் நகர நாடகம்

## ஜெர்மனி ஜப்பான் இன்றிச் சமாதானம்

### இன்னேர் வெர்ஸெயில்ஸ சாதனமா?

பரிஸ் நகரத்தில் சமாதான மகாநாடு ஆரம்பமாகிவிட்டது இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ருஷயா என்னும் நான்கு வல்லரசுகளுமே இம்மகாநாட்டை ஆரம்பித்தன. இன்னும்இவை 21நாடுகளை வரவழைத்து இம்மகாநாட்டிற் பங்குபற்றுமாறுகேட்டிருக்கின்றன. சமாதான மகாநாடு யாருடன் சமாதானம்கொண்டுவரப் போகிறது? முன்னர்ப் பகையாகவிருந்த ஜெர்மனியும் ஜப்பானும் இந்த மகாநாட்டிற் பங்குபற்ற உரிமையில்லையாம். ஏன்? அவை ஜனநாயகஆட்சியில் நல்லபயிற்சிபெற்று ஸ்திரமாக வரும்வரை அந்த இரு நாடுகளையும் இப்படியான சமாதானப் பேச்சுக்களிற் சேர்க்கமுடியாது என்று இம் மகாநாட்டைக்கூட்டிய நாலு வல்லரசுகளும் தீர்ப்பு வாசித்துவிட்டன.

முதலாவது ஐரோப்பிய மகாயுத்தத்தில் வெற்றியடைத்தநாடுகள்வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கை என்ற ஓர் சமாதான உடன்படிக்கையைத் தயாரித்து, அதனைத் தோல்வியடைந்த ஜெர்மனிமீது திணித்தனர் அந்த வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கைதான் இரண்டாவது உலக மகாயுத்தத்தைக் கிளப்பினது என்று அரசியல் வல்லுநர் கூறுவர். வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கை செய்துள்ள அநியாயங்களே ஹிட்லர் உற்பத்தியானதற்குக் காரணம என்பதை இன்று வெற்றிவெறி பிடித்துள்ள வல்லரசுகள் மறந்துவிட்டன, ஜெர்மனி, ஜப்பான் என்ற இரண்டின் நாமமேயில்லாமல் அவற்றை அழித்து ஒழிப்பதுவே சில வல்லரசுகளின் நோக்கமாகவிருக்கிறது.

### இலங்கையில் இந்தியர் நிலை

இலங்கையிலே இந்திய மக்கள் மிகவும் கொடூரமாய் நடாத்தப்படுகின்ருர்கள், இவ்விஷயத்தில் இந்திய அரசாங்கம் உடன் தகுந்த நடைவடிக்கை எடுக்கவேண்டும் என்று சென்ற செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த அகில இந்திய மூஸ்லிம் லீக் கூட்டத்தில் ஓர்தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

### ஜீவன் முத்தர்

தூயவாழ்க்கை; மேலான லட்சியம்: இவையே மனிதனுக்கு வேண்டியன. உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம்: எல்லாம் இறைவன் செயல் என்று தன் கர்மத்தை நிஷ்காமியமாகச் செய்வோரே ஜீவன் முத்தராவர்.

### மிஸ்ரர் சேனநாயக்கா உறுதி கூறுகிருர்

சென்ற புதன்கிழமை, ஆசிரியர் வேதன விஷயமாக ஓர் தூதுக்கோஷ்டி மிஸ்ரர் சேனநாயக்காவைப் பேட்டிகண்டது. ஆசிரியர் வேதன விஷயம் புநராலோசனைசெய்யப்படும் என்றும், மிகுந்த அநுதாபத்துடன் அது சிந்திக்கப்படும் என்றும் மிஸ்ரர் சேனநாயக்கா தூதுக்கோஷ்டிக்கு உறுதி கூறினர்.

## காரணம் என்ன?

### ஈராக்கில் இந்தியப் பட்டாளம்

மத்திய கிழக்குப் பிரதேசமான ஈராக்கிற்கு, இந்தியப் பட்டாளத்தை அவசரம் அவசரமாக அனுப்புவதன் நோக்கம் என்ன? பேர்சியாவில், பிரிட்டிஷார்க்கு மாருன ஏதும் நெருக்கடிகள் விளைந்திருக் கின்றனவா?

தென்பேர்சியாவில் மிகவும் பெரிய எண்ணெய்க் கிடங்குகள் உண்டு இக்கிடங்குகளிற் பல பிரிட்டிஷார்க்குச் சொந்தமானவை. இவற்றைக் கைப்பற்றிப் பிரிட்டிஷாரை விரட்டுவதற்கு ஏதுங் கருமங்கள் நடைபெறுகின்றனவா?

"தென்பேர்சியாவில் வசிக்கும் பிரிட்டிஷ் பிரசைகளான, இந்தியர், அராபியர், ஆங்கிலேயர் என்பவர்களுக்கு ஆபத்து வருங் காலத்தில், அவர்களைப் பாதுகாப்பதற்கு ஆயத்தமாகவே, பிரிட்டிஷ் படைகள் ஈராக்கிற் கொண்டுவரப்பட் டிருக்கின்றன" என்று பிரிட்டிஷ் அரசாங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது;

பேர்சியாவின்எண்ணெய்க்கிடங்குகள்விஷயமாக, ருஷியாவுக்கும் இங்கிலாந்துக்கு மிடையே பலகாலமாக அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருப்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம்.

### மைசூர் திவான்

மைசூர் சமஸ்தானத்தின் திவான் (பிரதம மந்திரி) ஆக சேர். ஏ இராமசாமி முதலியார் நியமிக்கப்பட்டுவிட்டார் என ஓர் செய்தி கூறுகிறது.

# பலஸ்தீனப் பிணக்கு

### ஆங்கிலரின் வழாவழாக் கொள்கை

பலஸ்தீனத்தில் 1லட்சம் யூதரைக் குடியேற்றுவதுஎன்று ஆங்கில-அமெரிக்க விசாரணைச்சபை நிர்ணயித்த ஒழுங்கில் இன்னும் ஒருவிதமான முடிவும் ஏற்படவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் தனது இயல்பான வழவழாக் கொள்கையைக் கடைப்பிடித்து நாட்களைப் போக்கிவருகிறது. இதற்கிடையில யூதர் பொறுமையிழந்து பிரிட்டிஷார்க்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்துவர, அவர்களையடக்குவதில் பிரிட்டிஷார் இப்போது ஈடுபட்டு வருகின்றனர்.

பலஸ்தீனத்தை நாலு மாகாணங்களாகப் பிரித்து, ஓர் மாகாணத்தில் யூதர்க்கும், இன்னேர் மாகாணத்தில் அராபியர்க்கும் மாகாண சுயாட்சி வழங்கி, ஓர் மத்திய அரசாங்கத்தை ஏற்படுத்தலாமோ என்றும், பிரிட்டிஷ் அரசாங்கம் இப்போது ஆலோசித்து வருகிறது. இதற்கு லண்டனில் ஓர் வட்டமேசை மகாநாடு கூட்டுவதென்றும், அதில் யூதப் பிரதிநிதிகளையும் அரபுப் பிரதிநிதிகளையும் சேர்த்து ஓர் முடிவு செய்வதென்றும் பிரிட்டிஷ் அரசாங்கம் ஆலோசிக்கிறது. இப்படியான வட்டமேசை மகாநாட்டிற் பங்குபற்றத் தாம் தயார்; ஆனல் யூதப் பிரதிநிதிகளுடன் தாம் பேச்சுவார்த்தைகள் நடத்தமுடியாது என்று அரபு நாடுகள் ஓர்நிபந்தனையை விதித்திருக்கின்றன. எனவே, வட்டமேசை மகாநாடு கூட்டும் ஆலோசனையைப் பிரிட்டிஷார் கைவிடலாம். யூதர், அராபியர் என்பவர்களை லண்டனில் அழைத்து அவர்களின் ஆலோசனைகளைக் கேட்ட பின், ஓர் முடிவைச் செய்ய பிரிட்டிஷ் அரசாங்கம் எண்ணலாம்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆலோசனைக்கு அமெரிக்கா இணங்குமோ என்பது சந்தேகம். யூதரில் 1 லட்சம் பேரை முதலில் பலஸ்தீனத்துக்குள் விடவேண்டும் இதனல் நேரிடும் குழப்பங்களைச் சமாளிக்க ஆங்கில-அமெரிக்க அரசினர் நடைவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அமெரிக்காவின் எண்ணமாயிருக்கிறது.

இன்னும் இரண்டொரு தினங்களில் சகல விஷயங்களும் தெளிவாக பலஸ்தீனத்தின் முடிவு துலாம்பரமாக வெளிவரக்கூடும்.

# கண்டிப்பாக நிற்க வேண்டும்

### இந்திய தபாற்காரர் வேலைநிறுத்தம்

23 நாட்களாக வேலைநிறுத்தம் செய்துவந்த இந்திய தபாற்காரர் சென்ற சனிக்கிழமை தொடக்கம் வேலைநிறுத்தம் ஒழித்துத் தம் கடமையைப் பார்க்க ஆரம்பித்துவிட்டார்,

### அன்றேல் இலங்கை அரசாங்கம் பணியாது

#### ஸ்ரீ ஆனே எச்சரிக்கை

இலங்கை இந்திய தொழிலாளருக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் ஏற்பட்டுள்ள தகராறைச் சமரசமாகத் தீர்த்து வைக்க பண்டித ஜவஹர்லால்நேரு ராஜாஜியுடனும்திருவாளர்கள் ஜி. ராமச்சந்திரன, அசியநாயகம் ஆகியவர்களுடன் வெகு சீக்கிரத்தில் இலங்கைக்கு விஜயஞ் செய்வார் என்று அறியப்படுகிறது. 8-ந் தேதி கூடும் காங்கிரஸ் காரியசபைக்கூட்டம் முடிவடைந்தவுடன் அவர்கள் இலங்கைக்குப் பிரயாணமாவர்களென்று இப்போது தெரிகிறது.

இலங்கையிலுள்ள இந்திய அரசாங்கப் பிரதிநிதியான ஸ்ரீ எம். எஸ். ஆனே வார்தாவில் ஓர் பத்திரிகை நிருபருக்குப் பேட்டியளித்துப் பேசியபோது பின்வருமாறு கூறினர்:—

"இலங்கையிலுள்ள இந்தியர் பிரச்னையை மிகுந்த எச்சரிக்கையுடன் கவனித்துத் தீர்க்கவேண்டும். மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுத்தாலொழிய இலங்கை அரசாங்கம் பணிந்து வரும்போல் எனக்குத் தோன்றவில்லை."

ஸ்ரீ ஆனே மகாத்மா காந்தியைச் சமீபத்தில் சந்தித்து இலங்கை இந்தியர் நிலைமையை அவருக்குச் சொன்னர். அவர் கல்கத்தாவுக்கும் கயாவுக்கும் சென்றுவிட்டு அடுத்தவார ஆரம்பத்தில் இலங்கைக்குப் புறப்படுகிருர்.

# எல்லாம் கெட்டன

## ஆசிரியர் பரீட்சையின் அல்லோலகல்லோலம்

### எல்லாக் கேள்விகளும் அம்பலமாயின

### பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது

கணிதத்துக்கான வினப்பத்திரங்கள் பரீட்சைக்கு முன்னரேயே வெளியானபடியால், ஆசிரியர் பரீட்சைக்கான கணிதப்பரீட்சை சென்ற வெள்ளிக்கிழமை நடைபெறவில்லை நாளைப் புதன்கிழமை நடக்கும் என்ற செய்தி இப்பத்திரிகையின் முதலாம் பக்கத்தில் வெளிவந்திருக்கிறது.

உற்று நோக்குமளவில் கணிதக் கேள்விறாத்திரமன்றி ஆசிரியர் பரீட்சைக்கானசகலகேள்விப்பத்திரங்களும்பரீட்சைக்குமுன்னரேயே பகிரங்கமாகிவிட்டனஎன்று தெரிகிறது உதாரணமாகஇலக்கியம் சுகாதாரம் முதலாம் பாடங்களுக்கான வினப்பத்திரங்கள்ஏற்கெனவே பகிரங்கமாய் விட்டனஎன்று பிபிலைப் பிரதிநிதியான மிஸ்ரர் டபிள்யூ தகநாயக்காகல்விமந்திரிக்குத் தக்கஆதாரங்களுடன் எடுத்துக்காட்டினர். அதன்பயனக, இதுவரை நடந்த இந்தப் பரீட்சை முழுவதையும் நிராகரித்துவிட்டு, இன்னேர் பரீட்சையை நடாத்த வித்தியாபகுதியார் தீர்மானித்துவிட்டனர், அப்பரீட்சை எப்போது நிகழும் என்பது இன்னும் குறிக்கப்படவில்லை.

### பொக்கணை நீரூற்று

பொக்கணை நீரூற்றிலிருந்து இதுகாறும் மணித்தியாலம் ஒன்றுக்கு 50000 கலன் தண்ணீரே ஓர் யந்திரம் கொண்டு இறைக்கப்பட்டு வந்தது இப்போது இரண்டு யந்திரங்கள் ... 75000 ... நீர் இறைக்க நிச்சயிக்கப்பட்டிருக்கிறதென்று அறிகிறோம்.

### இன்று

இன்று நல்லைக்கந்தன் உற்சவத்தின் 5-வது தினமாகும்: கலியுகவரதனய், கண்கண்ட தெய்வமாய் விளங்கும் கந்தக்கடவுளின்பதாம்புயங்களை மனமொழி மெய்களினல் வழுத்துவோர்க்கு வரும் குறை யாதுமில்லை.

### ஆடி அமாவாசைத் திருநாள்

நிகழும் விய வருஷ ஆடி மீ 13 உ (28-7-46) ஞாயிற்றுக்கிழமையன்று மேட்டுத் தெருவிலுள்ள கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் ஆடி அமாவாசைத்தினம் கொண்டாடப்பட்டது. சபையின் உப தலைவராகும் திரு. K. V. S. சுந்தரமவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தனர். சபையின் பூஜாக்கிருகத்தில் பூசை நிகழ்ந்தபின் திருவாங்கூர்ப் பிரதம நீதிபதியாகும் திருப்புகழ்மணி கிருஷ்ணசாமி ஐயாவர்களின கோஷ்டியைச் சார்ந்த ஸ்ரீ முருகதாஸ் அவர்கள் 'அருணகிரிநாதர் திருப்புகழ் உபதேசம்' என்னும் பொருள்பற்றி ஓர் அரிய சங்கீத உபந்நியாசம் நிகழ்த்தினர், திருப்புகழ்ப் பாடல்களும் சில ஸ்ரீ முருகதாஸ் அவர்களாலும் அவர் மாணவியராலும் வாத்தியசகிதமாகப் பாராயணஞ் செய்யப்பட்டன, பின்னர் சபையில் குழுமியிருந்த அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டதும் தேவார பாராயணத்துடன் கூட்டம் இனிது ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயுமானவர் பாடல்

சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

தேன்முகம் பிலிற்றும் பைந்தாட்
செய்ய பங்கயத்தின் மேவும்
நான்முகத் தேவே நின்னுனட்டிய
வகில மாயை
கான் முயற்கொம்பே யென்கோ
கானலம் புனலே யென்கோ
வான்முக முளரி யென்கோ
மற்றென்கோ விளம்பன் வேண்டும்.

பசிய நாளத்தையுடைய தேனைச் சொரியும் செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்கு திருமுகங்களையுடைய கடவுளே! உமமாற் சிருட்டிக்கப்பட்ட இந்த மாயப் பிரபஞ்சத்தைக் காட்டில் வசிக்கும் முயலினது கொம்பு என்று சொல்லுவமா? கானற் சலமென்று கூறுவமா? ஆகாயத் தாமரை என்பேமா? வேறு என்னென்று கூறலாம். விவரமாக விளக்க வேண்டுகிறேன் என்பது இப் பாடலின் பொழிப்பாகும்.

இப் பிரபஞ்சத்தை முயற்கொம்பு முதலியவை போலப் பொய்யென்பதா அல்லது மெய்யென்பதா? பொய்யல்ல மெய்ம்மையேயாம் ஏகான்மவாதிகள் முயற்கொம்பைப் போல் பிரபஞ்சம் பொய்யென்பர் அவர் கூற்று பொருந்துவதன்று. முயற்கொம்பு இன்மைப் பொருள். அதைப்போல் பிரபஞ்சம் இல்பொருளாயின் அதனைப் பிரமா சிருட்டித்தாரென்றதும் திருமால் காக்கின்றாரென்பதும் என்னை? இல்லாததொன்றைப் படைத்தலும் காத்தலும் கூடாவாம். இவ்வறிவில்லாத கூற்றுக்களையா எமது தாயுமானர் கூறுவர்? ஓர்போதும் அங்ஙனங் கூறார். மற்றென்னையோ இப் பாடலின் பொருள் என்னில் சங்கார கர்த்தாவால் சர்வ சங்கார காலத்தில் உலகம் ஒடுக்கப்படுமபோது சில, பொருளிருக்கும்; சில அழிவெய்தும். திருமால் பிரமன் இருப்பர் ஏனையோர் அழிவர். சங்கார காலத்தில் எல்லாஞ் சூனியமாய்ப் போகுமென்பதே இப்பாடலின் கருத்து. இதனைப் பின்வரும் பாக்களால் அறியலாம்.

வேண்டுவ படைத்தாய் நுந்தை
விதிப்படி புரந்தா னத்தைக்
காண்டக வழித்தான் முக்கட்
கடவுடா னினைய வாற்றால்
ஆண்டவ னெவனே யென்ன
வறிகிலா தகில நீயே
ஈண்டியீ வல்லபீர வெம்மனோர்க்
கியம் புகண்டாய்.

பிரமதேவரே நீவிர் ஆன்மாக்களின் இச்சைவழி வேண்டிய தனுகரண புவன போகங்களைச் சிருட்டித்தீர் அவற்றை உமது தாதையாகிய திருமால் காத்தனர். அப்படி அவரால் காக்கப்பட்ட பிரபஞ்சத்தை முக்கண்ணராகிய சிவபிரான் யாவருங் காண அழித்தனர். இம்முறையால் மூவரென் றெண்ணப்பட்டவருள் உலகிற்குக் கடவுளர் யாரென்பதை உலகம் அறியா திருக்கின்றது ஆகலின் இச் சந்தேகத்தை நீரே எமக்குத் தீர்த்தருளுவீராக இதற்கு உத்தரம் அடுத்தபாடலில் காணலாம்.

கண்டன வல்ல வென்றே
கழித்திடு மிறுதிக் கண்ணே
கொண்டது பரானந்தக்
கோதிலா முத்தியத்தால்
பண்டையிற் படைப்புங் காப்பும்
பறந்தன மாயையோடே
வெண்டலை விழிகை காலில்
விளங்கிட நின்றான் யாவன்.

காணப்படுவனவாகிய பொருள்களெல்லாம் இன்பந் தருவனவல்ல என்று வேதம் கழித்துவிடும், அங்ஙனங் கழித்துச் சென்ற முடிவிடத்தில் (வேதாந்தத்தில்) கொண்டது குற்றமற்ற பரமானந்த சொரூபமாகிய

சங்காரகாலத்தில் சிருட்டியுந் திதியும் (அதாவது அத்தொழிலாளராகிய பிரமனுந் திருமாலும்) மாயையோடு அழிந்துபோவரன்றோ அப்படி அவ்விருவரும் அழிந்தொழியுஞ் சமயத்தில் வெண்மையாகிய தலையும் விழியும் முறையே கரத்திலும் பாதத்திலும் பிரகாசிக்கும்படி நின்றவன் யாவன்? இவ்வுண்மையைக் கூறுவீராக.

மேலைச் செய்யுளில் ஆண்டவன் எவனோ என்றதை இங்கே சங்கார கருத்தாவாகும் என்று சித்தாந்தப் படுத்தியபடி எங்ஙனமெனின் வேதம் மாயாகாரியமாகிய பிரபஞ்சபேதங்களெல்லாங்கூறி அவற்றைப் பந்தமென்று கழித்து ஒதுக்கிப் பின்னர் முத்தி என்னதென்பதை முடிவுகட்டியுள்ளது. அப் பரமானந்த நிலையில் படைப்புங் காப்பும் உண்டெனில் சங்காரமென்பது யாது? படைப்புங் காப்பும் பறந்தனவென்றும் இவ்விரு தொழிலையுமுடைய பிரபஞ்சத்திற்கு மூலம் மாயையாகலின் அம்மாயையே பிரபஞ்சத்தைக் காரியப்படுத்துமென்று கூறப்படுமாதலின் அம் மாயை சிவசத்தி இயக்க இயங்குதலும் அஃதிலாதபோது அச் சத்தியிலொடுங்கிச் செயலற்றிருப்பது மாதலால் படைப்புங் காப்பும் மறைந்தன என்னுது மாயையோடே பறந்தன என்றார். படைத்தல் காத்தலைத் தனது சங்காரத் தொழிலிலும் மாயையைத் தனது சத்தியிலும் அடக்கிக் கொள்ளுவது போல் பிரமனையும் திருமாலையும் தனதுதிருமேனியில் ஒடுக்கிக் கொள்வதும் இயல்பாதலால் வெண்டலை விழிகை காலில் விளங்கிட எனவும் கூறினார். பிரபஞ்சமும் மாயையும் கடவுளரும் இவ்வாறொடுங்கவும் ஒடுங்கா நின்றவன் சங்கார கர்த்தாவே யென்று உணர்த்தநின்றான் யாவன் என்றனர் ஆசிரியர்.

இதனால் பிரபஞ்சமெல்லாம அந்தத்தை யடைந்த அவ்விறைவனிடத்திருந்தே மீளவுந் தோன்றுமென்றதாம். இதனை "அவனவளது வெனுமவை" என்னுஞ் சிவஞானபோதச் சூத்திரத்தால் காணலாம.

உலகிற்குக் கடவுள் இவனென்றுணர்ந்து துதிக்கத் தொடங்கிய வேதம் பிரபஞ்ச பேதங்களையும் அவற்றின் இலக்கணங்களையும் அப் பிரபஞ்சத்திற்குக் காரணமாகிய மாயையின் இலக்கணத்தையும் அம் மாயரப் பிரபஞ்சத்தைப் படைத்துக் காத்து வருகின்ற பிரம விஷ்ணுக்களின் இலக்கணங்களையும் ஆராய்ந்தபோது அப்பிரபஞ்சம் அவனவளது எனப்படும் நாம ரூபங்களாயும் சடமாயும் தோன்றியது. மாயை இவைதோன்றி நின்றொடுங்குதற்குக் காரணமாகியும் அசித்தாய் அசலமாகியும் காணப்பட்டது பிரம விஷ்ணுக்கள் தங்கள் தொழிலுக்கு மேலொருதொழிலையும் கடவுளையும் உடையராகியும் இருத்தலை உணர்ந்ததோடு மேலிருவரொடு உலகமெல்லாம் அழிந்தொழிதலையும் அறிந்தது. இதனால் கடவுளாவான் ஒருவனில்லையோவென ஐயம் வந்தது கடவுளாயுள்ள அவன் அப்போது தோற்றமளித்தான் அப்படித் தோன்றியவன் கையில் பிரம கபாலமும் காலில் திருமாலின் கண்ணும் காணப்பட்டன. அவனையே வேதம் துதிக்கலாயிற்று என்றும் பொருள் கொள்ளலாம்.

இதனால் வேதம் தனது முடியிலே கொண்டது பிரபஞ்சமு மன்று மாயையுமன்று பிரம விஷ்ணுக்களுமல்ல. சிவபிரானையே அது வேதம் போற்றியதென்று அறியற்பாலது.

(தொடரும்)

## தமிழ்மக்களின் தற்கால நிலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

சேவையைத் துறந்து விட்டார்களென்று கூறினும் பொருந்தும். பொதுசன சேவையைச் செய்தற்கு வசதியாக இவர்களுக்கு மாசந்தோறும் 500 ரூபா வேதனமாகக் கொடுக்கப்பட் டிருக்கின்றது. எனவே, இவர்கள் பொது ஜனங்களுடன் ஊடாடி, அவர்களுக்கு விஷயங்களை விளக்கி, அவர்களின் தேவைகளை விசாரித்தறியச் சௌகரியங்கள் இல்லை என்ற சாக்குப் போக்குக் கூறமுடியாது. தம் முழுநேரத்தையும் இவர்கள் பொதுஜன கைங்கரியத்துக்குச் செலவழித்திருக்க வேண்டும். இதில் இவர்கள் தவறிவிட்டபடியால் இன்று தமிழ் மக்கள் மிகவும் கேவலநிலையை எய்தியிருக்கின்றனர் என்று கூறின் அது பிழையாகாது.

### தினசரிப்பத்திரிகை வேண்டும்

இன்று சிங்கள மக்கள் அரசியல் விஷயத்திலுமாகுக, சமய விஷயத்திலுமாகுக, பெரும் விழிப்படைந்திருப்பதற்குக் காரணம் என்ன? பத்திரிகைகளின் வளர்ச்சியே என்று திடமாகக் கூறலாம். இற்றைக்கு 30 ஆண்டுகளுக்கு முன், சிங்களர்க்கென ஓர் தகுதிவாய்ந்த பத்திரிகை கிடையாது. ஆனல் இன்று அவர்களுடைய நிலைமை என்ன? இரண்டு ஆங்கிலத் தினசரிகளையும் ஐந்துக்கு மேற்பட்ட சிங்களத் தினசரிகளையும் 50 க்கு மேற்பட்ட வாரப் பத்திரிகைகளையும் மிகவும் உயர்ந்த முறையில் நடாத்துகிறார்கள். இது மாத்திரமா? ஓர் தமிழ்த் தினசரியையும் இச் சிங்களர் வைத்து நடாத்துகின்றனரென்றால் அது எங்கள் எல்லோர்க்கும் அவமானம் தரத்தக்க செயல் என்பதை எம்மில் யாரேனும் நினைத்ததுண்டா? இலங்கையிலே வாழும் இலங்கைத்தமிழ் மக்களுக்கென ஓர் ஆங்கிலத் தினசரியுண்டா? ஓர் தமிழ்த் தினசரிதானும் உண்டா? சிங்களர் தமிழ்ப் பத்திரிகையை வைத்து நடத்தும் இக்காலத்தில் தமிழ் மக்கள் அப்படி ஓர் பத்திரிகையை நடாத்தத்தானும் நினைக்காத கேவல நிலைமையை என்னென்று கூறுவது! ஏன், தமிழ்மக்களிடையே பணம் இல்லையா? பத்திரிகை நடாத்துதற்கேற்ற சாதனங்கள் இல்லையா? பத்திரிகைகளை நிர்வகிக்க ஆற்றலுள்ளார் இல்லையா? எல்லாம் உண்டு. ஆனல் அபிமானம்தான் இல்லை. தலைவர்கள் என்றிருப்போர் அரசாங்க சபைக்கும், நகரசபைக்கும் அபேட்சகராக முன்வந்துகள், சாராயம் என்பவற்றுக்கும், பெற்ரோலுக்கும், பணஞ் செலவழிக்கத் தயாராக இருக்கின்றனரேயன்றி, சமூக வளர்ச்சிக்கான ஓர் கைங்கரியத்தில் ஈடுபட ஆயத்தமாக இல்லை. சிங்களப் பத்திரிகையான 'தினமின'' என்னும் தினசரியால் இன்று சிங்கள மக்கள் அடைந்துள்ள விழிப்பைக் கண்ணாரக் கண்டுள்ள நம் தலைவர்கள் ஓர் தமிழ்த் தினசரியை ஸ்தாபித்துத் தமிழ் மக்களுக்கு அரசியல்ஞானம் ஊட்ட இனியும் தயங்குவரா? தமிழ் மக்களுக்கிடையே ஒற்றுமையில்லை. ஓர் விஷயத்தை ஆலோசித்துத் தீர்மானித்து ஓர் முடிவுக்கு வரமுன்னர், அவர்களுக்கிடையே தலைமைப்பதவி பெறுவதில் பிணக்கு ஏற்பட்டு விடுதல் சகசமாகிவிட்டது. இந்த அற்பக் குணந்தான் இன்று நாம் அடைந்துள்ள கேவல நிலைக்கு மூலகாரணம்.

## மீசாலை வாலிபர் சங்கப் பொதுக்கூட்டம்

29.7-46 திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு மீசாலை தெற்கு விக்னேஸ்வர வித்தியாசாலைமண்டபத்தில் ஆசிரியர் ஸ்ரீ R.T. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் டி கூட்டம் ஆரம்பமாயது

தலைவர் மேற்படி சங்கத்தின் நோக்கத்தை எடுத்து விளக்கியதன்மேல் ஸ்ரீ N. அருணாசலம் B A அவர்கள் வாலிபர் கடமையை நன்கு விளக்கித் 'தாசியர் நடனம்", "உயிர்ப்பலி" இவை போன்றவைகளை ஆணித்தரமாகக் கண்டித்தார், பின்னர் பண்டிதர் ஸ்ரீ சி. இ. கந்தசாமியவர்கள் மேனாட்டு வாலிபர்களின் போக்கைத் தழுவி வாலிபர் செய்யவேண்டியனவற்றை யெடுத்துக்காட்டினர். பின்னர் ஆசிரியர் ஸ்ரீ K. S. கார்த்திகேசு அவர்கள் இத்தகைய இயக்கமே நாட்டைப் பரிபாலிக்க முடியுமெனப் பல ஆதாரங் காட்டி நிறுவினர். மேற்படி சங்கத்துக் காரியஸ்தர்களாகப் பிரம்மஸ்ரீ N. குமாரசாமி ஐயரும், திரு. வா. சிதம்பரப்பிள்ளை ஆசிரியரும், தலைவராக திரு. R. T. சுப்பிரமணியம் அவர்களும், உபதலைவராகதிரு. N. கைலாசபிள்ளையவர்களும், தனாதிகாரிகளாக திரு, P. அருளம்பலம், ஆசிரியர் திரு K மார்க்கண்டு அவர்களும்; போஷகர்களாக திருவாளர்கள் S K. செல்லையா, ப. வீரசிங்கம், S மயில்வாகனம், இ க. மார்க்கண்டு K. S கார்த்திகேசு ஆகியவர்களும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஒரு நல்விருந்து

இப்போது அச்சிடப்படுகிறது :: விரைவில் வெளிவரும்

சரித்திரபாடம்

ஐந்தாம் வகுப்புக்குரியது.

ஆக்கியோன் ச. ஜெயவீரசிங்கம் B A. Hons.
சரித்திர ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

இப்புத்தகத்தை நீங்கள் ஆதரிக்கவேண்டியதற்கு நியாயங்களாவன:

1. வித்தியாபகுதியாரின் பாடத்திட்டத்துக் கமையும்படி இப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.
2. இப்புத்தகத்தில் உபயோகமுள்ள பல சித்திரங்களும் வினாக்களும் இருக்கின்றன.
3. உண்மையானசரித்திரமன்றிக்கட்டுக்கதைகள்நீக்கப்பட்டுள்ளன
4. இப்புத்தகம் இலகுவான நடையி லெழுதப்பட் டிருக்கிறது.
5. இப்புத்தகம் வித்தியாதிகாரியின் அங்கீகாரம் பெற்றுள்ளது.
6. இப் புத்தகத்திற் காணும் சிலபாடங்கள் ஐந்தாம் வகுப்புக்கு என்று எழுதிய வேறுபுத்தகங்களில் இல்லை.

பிரதிகள் பிரபல புத்தக வியாபாரிகளிடமேனும் நூலாசிரியரிடமேனும் பெறற்பாலன.

ஒரு புத்தகத்தின் விலை ரூபா 1. 50 சதம்.

(Mis 136 6, 13, 20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

**போராட்டம்?**

முஸ்லிம்லீக்கும், ஜின்னாவும் செய்துள்ள போராட்டத் தீர்மானம் இன்னும் தெளிவற்ற நிலைமையிலேயே இருக்கிறது. இந்தப் போராட்டத்தை யார்மீது தொடுப்பது என்பது பற்றி ஜின்னா கடைசிவரை மவுனஞ் சாதிக்கிறார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின்மீது போர் தொடுப்பதாயின் எக்காரணங் கொண்டு? பிரிட்டிஷார், தாம் இந்தியாவைவிட்டு வெளியேறப்போவதாகச் சொல்லிவிட்டார்கள். எனவே அவர்கள்மீது போராட்டம் தொடுப்பது ஆவசியகமல்ல. காங்கிரஸ்மீதாயின், அதற்கும், முஸ்லிம் லீக் தயாராக இல்லை என்பது இப்போது மெல்லமெல்ல வாக வெளிவருகிறது. உண்மையைக் கூறுங்கால், இயன்றவரைக்கும் வெருட்டி, பெறவேண்டியசலாக்கியங்களைப் பெற முயற்சிப்பதே முஸ்லிம் லீக்கின் லட்சியம் என்பது இப்போது ஒருவாறு புலனாகின்றது.

●

**இறங்குகிறார்**

சென்ற புதன்கிழமை ஜின்னா சாய்பு பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளித்து, முஸ்லிம்லீக் செய்துள்ள தீர்மானங்களை விளக்கினார். அந்தப் பேட்டியில், அவருடைய அதட்டல்களும், உருட்டல்களும் மிரட்டல்களும் இல்லாம லிருப்பது குறிப்பிடத்தக்கது. அரசியல் நிர்மாண சபையை நாம் பகிஷ்கரிக்கத் தீர்மானித்தது உண்மைதான். ஆனால் சந்தர்ப்பம் நேர்ந்தால், நாம் அத்தீர்மானத்தைத் தவிர்த்து அச்சபையுட் புகுந்து வேலை செய்யவும் முடியும் என்று கூறியதிலிருந்து, எத் திசையிற் காற்று அடிக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம்

●

**வேலை நடக்கிறது**

முஸ்லிம் லீக்கின் வெருட்டு இவ்வளவிலிருக்க, அரசியல் நிர்மாண சபை அமைப்புக்கான வேலைகள் எவ்வித தடங்கலுமின்றி நடக்கின்றன. முஸ்லிம் லீக்கின் தீர்மானம் பிரிட்டிஷ் அரசியல் வட்டாரங்களிடையே ஓரளவுக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் கொடுத்திருக்கிறதென்றாலும், சமாசத்துக்கு இன்னும் வழியுண்டு என்ற அபிப்பிராயம் பலமாக இருக்கின்றது. இடைக்கால அரசாங்கம் அமைக்கும் வேலையில் இராஜப் பிரதிநிதி மிகவும் ஊக்கம் எடுத்து, கட்சித் தலைவர்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டு வருகிறார்

●

**"இறங்கி வா"**

சென்றவாரத்திறுதியில் பம்பாயில் நிகழ்ந்த கூட்டம் ஒன்றில் சர்தார் வல்லபாய் படேல், முஸ்லிம்லீக் செய்துள்ள தீர்மானத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்தார். உருட்டல், மிரட்டல்களை விடுத்துச் சமரச மனப்பான்மையுடன் ஜின்னா வருவாரானல், அவர்க்குச்சரி, முஸ்லிம் லீகிற்குச் சரி ஏதும் நியாயமான மனக் குறைகள் இருப்பின், அவற்றை நிவிர்த்திக்கக் காங்கிரஸ் எப்போதுமே தயாராக இருக்கிறது. முஸ்லிம்லீக்கில் உள்ளவர்கள், பிரிட்டிஷார் அளித்துள்ள கௌரவப் பட்டங்களைத் துறக்கிறார்கள்! இந்தச் செயலினால் எவ்வித பயனுங் கிடைக்கமாட்டாது ஏன், பிரிட்டிஷாரே, இன்னுஞ் சிலகாலத்தில் இந்தியாவைவிட்டுப்போகத் தயாராக இருக்கிறார்கள். எனவே அவர்களுடைய பட்டங்களை வைத்துக்கொள்ளுவதாலும் எவ்வித பயனுங் கிடையாது. நாட்டின் முன்னேற்றத்துக்கு இடறுகட்டையாக நிற்பதை விடுத்து, ஒத்துழைப்பை ஆதாரமாகக் கொண்டு உழைத்தால் முஸ்லிம் லீகுக்கும் ஜின்னாவுக்கும் நன்மையுண்டு என்று சர்தார் படேல் கூறினார்.

●

**நேரடிப்போராட்டத்தினம்**

வருகிற 16ந் திகதியை நேரடிப் போராட்டத் தினமாகக் கொண்டாடவேண்டும் என்று இந்தியாவில் உள்ள முஸ்லீம்களை, முஸ்லிம் லீக் கேட்டுக்கொள்கிறது. இத்தினத்தில் முஸ்லீம்கள் தத்தம் தொழில்களை நிறுத்திப் பகிரங்கக் கூட்டங்கள் மூலமாய், லீக் செய்துள்ள இரு தீர்மானங்களையும் ஆதரிக்கவேண்டுமாம். ஆனால் நேரடிப் போராட்டத்தை யாருக்கு எதிராக, என்ன முறையில் நடத்துவது என்பதுபற்றி முஸ்லிம்லீக் இன்னும் எவ்விதமான தீர்மானமும் நிறைவேற்றவில்லை.

●

**காங்கிரஸ் நிருவாகசபை**

சென்ற வியாழக்கிழமை நிகழ்ந்த பிரிட்டிஷ் மந்திரசபைக் கூட்டத்தில் இந்தியாவில் இப்போது நிகழ்ந்துள்ள நெருக்கடியான நிலைமை விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது 8-ந் திகதி நிகழவிருக்கும், காங்கிரஸ் காரிய நிர்வாகசபைக் கூட்டத்தில் என்ன முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்பதை அறியும்வரை, பிரிட்டிஷ் அரசாங்கம் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கமாட்டாது என்று தெரிகிறது. சென்ற மார்ச் மாதம் 15-ந் திகதி, பிரிட்டிஷ் பிரதம மந்திரி கூறிய மொழிகளை இச்சந்தர்ப்பத்தில், அரசியல்வாதிகள் எடுத்துக் காட்டுகின்றனர். "எந்தச் சிறுபான்மைக்கட்சியாவது, அரசியல்முன்னேற்ற விஷயத்தில் முட்டுக்கட்டையிட்டால் அதனைப்பொருட்படுத்தாது, நாம் அரசியற் சீர்திருத்த வேலைகளைச் செய்தே தீருவோம்" என்று பிரதம மந்திரி அட்லி கூறியுள்ளார், அதன்படிக்கு, முஸ்லிம் லீக் இப்போது இட்டுள்ள முட்டுக் கட்டையைப் பொருட்படுத்தாது, பிரிட்டிஷ் அரசாங்கம், காங்கிரஸ், சீக்கியர், ஏனைய சிறுபான்மையினர் முதலியவர்களிடம் அரசியலை நடத்தும் பொறுப்பை விட்டுவிடுமா? என்னுங் கேள்வி இப்போது கிளம்பியிருக்கிறது.

பரிசு ரூபா 500

போட்டி நேயர்கட்கு ஓர் அதிர்ஷ்டம்
மட்டக்களப்பு "பெனிவிட்" கம்பனியின்

"நுண்ணறிவுப் போட்டி"

ஆரம்ப நன்னாளை ஆவலுடன் எதிர்பாருங்கள்

Mis 141. 6-8-46

## வண்ணார்பண்ணை நாவலர் பாடசாலை

### பெற்றார்-ஆசிரியர் சங்கக் கூட்டம்

மேற்படி கூட்டம் நாவலர் பாடசாலை மண்டபத்தில் 1-8-46 வியாழக்கிழமை பிற்பகல் 5 மணி 30 நிமிஷமளவில் தொடங்கி நடைபெற்றது. நியாயதுரந்தரர் திரு. C. C. சோமசேகரம் அவர்கள் தலைவராக அமர்ந்து தமது முன்னுரை கூறினர். பின், இந்துசாதனப் பத்திராசிரியர் திரு. ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள் இக்கூட்டம் பெற்றார்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகிய முப்பகுதியாருடைய தொடர்பையும் ஒத்துழைப்பையும் வளர்த்தலை நோக்கமாகக் கொண்டதென்றும் அது எமது நாட்டு வழக்கப்படி நவராத்திரி காலங்களில் விசேஷக் கொண்டாட்டங்களோடு சிறப்பாக நடைபெற்று வந்ததென்றும், இப்போது மேனாட்டு முறைப்படி பாடசாலைகளில் குறித்த தினங்களில மாற்றி அமைக்கப்பட்டு நடைபெறுகிறதென்றும் பிள்ளைகளின்ஒழுக்கம், படிப்பின் ஊக்கம் முதலியவற்றிற்கெல்லாம் ஆசிரியர்களை விடப் பெற்றாரே முக்காற்பங்கும் பொறுப்பாளிகளாய்க் காரணராக இருக்கின்றார்களென்றும் பல உதாரணங்களாலும் ஏதுக்களாலும் எடுத்து விளக்கி விரிவாக ஓர் உபந்நியாசஞ் செய்தனர் அதன்மேல் கந்தர்மடம் ஆசிரியர் திரு. . S. குலரத்தினம் அவர்கள் பெற்றார் மாணவர்களின் ஒத்துழைப்பு ஆசிரியர்களின் கடமைகளை நிறைவேற்றற்கு இன்றியமையாது வேண்டும் என்டதைப் பற்றி விரித்து உபந்நியாசஞ் செய்தனர். பின், பாடசாலை வரவுப் பரிசோதகர் திரு பொ காசிலிங்கம் அவர்கள் பெற்றார் தம் பிள்ளைகளை இளமையில்படித்தற்கு உணவு உடைகளில் மாத்திரமே அருமை பாராட்ட வேண்டும் படிப்பிலும் ஒழுக்கத்திலும் திருந்துதற்கு வேண்டிய கவனமும் கண்டிப்பும் உடையவர்களாய்ப் பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்பல் வேண்டுமென்றும், இளமையில் படிப்பை நிறுத்தி சிறு பணச் சம்பாத்தியத்தின் பொருட்டுத் தொழில்களில் ஈடுபடுத்துவதனால், பிள்ளை பெரியவனாகி வந்து சீவியம் நடத்துங்கால் பெற்றாரைத்தான் குறை சொல்லிப் பச்சாத்தாபப்படவேண்டி வருமென்றும் பல பல நியாயங் காட்டியும், மாணவரை ஆசிரியர்கள் தக்க காரணத்துடன் கண்டித்து நடத்தும் விஷயத்தில் சில பெற்றார் அதற்கு மாறாக இருந்து பிள்ளைகளின் படிப்பிற்கும் ஒழுக்க பழக்கங்கட்கும் நட்டம் விளைக்கிறது சரியல்ல என்றும் பலவிஷயங்களைத் தெளிவுபட விளக்கிப் பேசினர்.

அதன்மேல் புதிய நிர்வாகசபை அங்கத்தவர்கள் சபையோரால் பிரேரித்து அங்கீகரிக்கப்பட்டு நியமனம் பெற்றனர்.

தலைவர்: வழக்கறிஞர் திரு. C. C. சோமசேகரம் அவர்கள், உபதலைவர்கள்: வழக்கறிஞர் திரு. V. சிவசுப்பிரமணியம் அவர்கள், டக்ரர் திரு. கா தம்பு அவர்கள், காரியதரிசி: தலைமையாசிரியர் வித்துவான் ந சுப்பையபிள்ளை இவர்களுடன் 13 பேரைக் கொண்ட ஓர் நிருவாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

திரு. மு. முத்துத்தம்பி அவர்கள் தமது குறிப்புரையில், இப்பாடசாலையில் சைவமும் தமிழும் பற்றிய அறிவு வளர்தற்கேற்ற உபந்நியாசங்களும் புராணபடனங்களும் மாசந்தோறும் ஆதிகாலத்திற்போல நடந்துவர இப்பாடசாலை மனேஜர் அவர்களிடம் அறிவித்து அவர்களின் உதவியோடும் அயலிலுள்ளஊரவர்களின் உதவியோடும் முயற்சி செய்து நடத்துவதற்கு இச்சங்கத்தார் சிரத்தை கொள்ளவேண்டும் என்று கூறினர்.

முடிவில் உபதலைவர் திரு. V. சிவசுப்பிரமணியம் அவர்கள் மாணவர்க்குச் சிற்றுண்டி வழங்கி உபசரிக்கக் கூட்டம் நிறைவேறியது

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

நிகழும் வியவருஷம் ஆடிமாசம் 20-ந் திகதி (4-8-46) ஞாயிற்றுக்கிழமை அநுராசபுரம் விவேகானந்த சபை மண்டபத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை வெகு சிறப்பாக நடைபெற்றது. காலை 10 மணியளவில ஷை நாயனார் படம் அலங்கரிக்கப்பட்டு பூசை யாரம்பமாயது. பின்னர் இச் சபையின் சார்பிலுள்ள பாடசாலை மாணவர்களது தேவாரபாராயணக் கச்சேரியும் 'வெள்ளானைச் சருக்கம்' புராணபடனமும் நடைபெற்று 12½ மணியளவில் பூர்த்தியாகிப் பாடசாலை மாணவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது மாலை 6½ மணியளவில் பின்னரும் பூசை ஆரம்பமாகியது 'சுந்தரமூர்த்தி நாயனாரும் சிவதொண்டும்' என்னும்விஷயம் பற்றி மேலைப்புலோலி வித்துவான் சதாவதானம் நா கதிரைவேற்பிள்ளை அவர்களின்மகன் நாவலர்பரம்பரை வித்துவான் கதிரை அரசன்' அவர்கள் சிறந்ததோர் சொற்பொழிவாற்றினர். "சுந்தரரும் சைவமும்" என்னும் விஷயம்பற்றி ஷை வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு. சி. அருளம்பலமவர்களும் அரியதோர் சொற்பொழிவாற்றினர். ஈற்றில் காரியதரிசியவர்கள் யாவருக்கும் நன்றி கூறினர். குருபூசைப் பிரசாதச் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டு இரவு 9½ மணியளவில் கூட்டம் இனிது நிறைவேறியது.

-கடித.

# உடன்விசாரணைசெய்க

## இனியும் மழுப்பி ஏமாற்றவேண்டாம் கல்விப் பகுதியினர்க்கு ஓர் கேள்வி

### பரீட்சை வினாக்கள் பகிரங்கமானது எப்படி?

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை ஸ்ரீ கோ. க. தம்பிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்:

சென்றவாரம் நடைபெற்ற ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சை சம்பந்தமான பரீட்சை வினாக்கள் வெளியானதுபற்றி பகிரங்க விசாரணை நடாத்தவேண்டும் என்று வற்புறுத்தும்படி தங்களை வேண்டுகின்றோம்.

பரீட்சை வினாக்கள் யாரால், எப்படி வெளிப்படுத்தப்பட்டது என்ற விடயங்கள் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படவேண்டும். பகிரங்க விசாரணை நடாத்தப்பட்ட பின்புதான் பரீட்சை நடாத்தவேண்டும்.

சென்றமுறை நடைபெற்ற ஆங்கில S. S. C பரீட்சைக்குத் தோற்றுத ஒரு மாணவனின் பெயர் பரீட்சையில் சித்தியடைந்தாரென்று வெளிவந்தது உலகறிந்த விடயம். இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்னவென்று பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டதா? அறிவிக்கப்படவில்லை என்பதும் உலகறிந்ததே.

மேற்படி சம்பவத்தைப்போல் சென்றவாரம் நடைபெற்ற பரீட்சையும் மழுப்பப்படலாம். இதற்கு நாங்கள் இனியும்இடங்கொடுக்கவொண்ணாது. பகிரங்க விசாரணை நடாத்தவேண்டுமென்று வற்புறுத்துவது தங்கள் கடமை.

இலங்கைமக்களின் சுபீட்சவாழ்வு கல்வி இலாக்காவில்தான் தங்கியுள்ளது என்பது தாங்கள் அறிந்த விஷயம். கல்வி இலாக்காவில் நிர்வாக ஊழல் நடக்காது இருந்தால்தான் கல்வி அபிவிருத்தியடையும்.

எனது வேண்டுகோள் தனிப்பட்ட வேண்டுகோள் அல்ல. ஆயிரக்கணக்கான பரீட்சார்த்திகளின் வேண்டுகோள். ஆகையால் இக்கடிதத்தைப் புறக்கணிக்காது தகுந்தன செய்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### புதன் ஆகஸ்ட் 7

காலை: 7-15 ஆரம்பம் 7-20 தமிழ்ச் செய்திகள் 7-30 எம் ஆர் குஞ்சம்மாள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வீணை பாட்டு, 8-20 எம் கண்ணன் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மாங்குடி வி நடராஜன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 மாங்குடி வி நடராசன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை: 5 எம் ஆர் குஞ்சம்மாள் பாட்டு 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10அறிவிப்புகள் 6.15கிராம நிகழ்ச்சிகள் 7சித்ரகானம் 7-15வாத்யகோஷ்டி 7.30 தமிழில் செய்திகள் 7-45 சினிமா விமர்சனம் 8 மாயவரம் கோவிந்தராஜபிள்ளை வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ஆங்கிலப் பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானலை 9.45 ஐரோப்பிய 10-30 முடிவு.

### வியாழன் ஆகஸ்ட் 8

காலை 7-15 ஆரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7-30 கடத்தூர் வெங்கடேச ஐயர், கடத்தூர் சங்கரராம ஐயர் இரு வீணைகள் 8 ஆங்கிலத்தில்செய்திகள்8-15 குரல்வளை 8-30 கே ராமசாமி பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 கே ராமசாமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 கடத்தூர் வெங்கடேச ஐயர், கடத்தூர் சங்கரராம ஐயர் இருவீணைகள் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6-10 அறிவிப்புகள் வானிலை 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 கே வி நடராசன் பாட்டு 7 15 செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 மன்னார்குடி ராஜகோபாலபிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 கர்ணனின் மனைவி 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 கே வி நடராசன் பாட்டு 10-30 முடிவு.

### வெள்ளி ஆகஸ்ட் 9

காலை: 7-15 ஆரம்பம் 7-20 தமிழ்ச் செய்திகள 7.30 டி எஸ் லோகநாதன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 திருக்கோயிலூர் எஸ் அலமேலு பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 திருக்கோயிலூர் எஸ் அலமேலு பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 திருக்கோயிலூர் எஸ் அலமேலு பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 டி எஸ் லோகநாதன் பாட்டு 5-40 குரான்-ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 புயவெளியீடு 7-15 செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 திருவெண்காடு பி சுப்ரமண்ய பிள்ளை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 நாடகம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 உலக விவகாரங்கள் 10 இசைசேர்வை 10.30 முடிவு.

---

### சேர். சொலமன் பண்டாரநாயக்கா மரணம்

இலங்கை ஸ்தல சுயாட்சிப் பகுதி மந்திரி மிஸ்ரர் S. W. R. D. பண்டாரநாயக்காவின் தந்தையார் சேர். சொலமன் பண்டாரநாயக்கா தமது 85-வது வயதில் சென்றபுதன்கிழமை தேகவியோகமாயினர்

## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)

---

## கந்தசாமி வைத்தியர் அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிநூல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசிஉண்டாக்கும் மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும் கருவை அழியாமல் காக்கும் பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி

பேரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் கால் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால்ருத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மேடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 27 26-4—25-10 (செ)

---


### ரூபா 240,000 வேண்டும்

இங்கிலாந்திலே இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாகவுள்ளார்க்கு ஓர் இருப்பிடமும் காரியாலயமும் ஏற்படுத்திக் கொடுக்க 240,000 ரூபா செலவு தேவைப்படுகிறது.

### பாமாவுக்கு மன்னிப்பு

ஜப்பானிய ஆக்கிரமிப்பின்கீழ், பர்மா நாட்டின் பிரதம மந்திரியாகவிருந்த டக்டர் பாமாவை, மன்னித்துவிடுவது என்று பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

---




எங்கும் கியாதிபெற்ற எமது

**ரேடியோ பீடிகளையே**

எப்பொழுதும் உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:
எல்லாஊர்களிலும் கிடைக்கும்
**மொடேண் ஏஜென்சீஸ்,**
சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)

---

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

**S. கனகசபை**
சிறுப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)

---

### வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

## அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்

### வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புத வெற்றி

| | |
|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 ,, |
| 1944ம்ஆண்டு வருஷாந்த வருமானம் | 39,45,103—00 ,, |

ஆயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது
இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை
நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கொடுக்கப்படும்
விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, **டொன் கரலிஸ் கட்டிடம்,**
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு

Mis 154 29-11-45—30-11(தி)

---

## பேர்பெற்ற பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகள்

உலகப் பிரசித்திபெற்ற, திறமானவையும், நன்மதிப்பு உள்ளவையும், பேசல் மிஷன கலிக்கற் ஓடுகளே. மிகக் குறைந்த தண்ணீரை உறுஞ்சுவன. கடைகளில் விலைப்படும் பலதினிசு ஓடுகளையும் நிறுத்துப்பார்த்துத் தண்ணீருள் நனையவிட்டுபபின்னும் நிறுத்து எது கூடிய தண்ணீரை இழுக்குமெனப் பரிசோதித்துப் பாருங்கள். தற்கால நிலைமைக்கும். தேவைகளுக்கும் ஏற்ற ஒரு புதுமாதிரி இவ்வோடுகள் செருகு விழிம்பும், இரட்டைப் பீலியும் உள்ளனவாய்ச செம்யபபட்டு இக்காலத்தில் அதிகமாய் உபயோகிக்கப்படுகின்றன. கீழைத் தேசத்தில் விலைப்படும் ஓடுகளுள் இவைகளே முதன்மை பெற்றன. வாங்கத் தீர்மானிக்குமுன் இவ்வோடுகளை ஒருதரம் பாருங்கள், கவனியுங்கள். மற்றைய ஓடுகளில ஏமாந்து நட்டப்படாதீர்கள்.

வேறு சாதி ஓடுகளைப்போல வழக்கமான தனிப் பீலி ஓடும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

**வில்லியம் மேதர் அன்சன்ஸ், தனி ஏசன்ட்**

Misc. 220—19-3-46—19-9-46) (செ)

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday August, 6, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org